முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பட்டினத்தார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

06.05.2019, திங்கட்கிழமை

1. **தருமசக்தியே அரங்கா போற்றி**
   **தயவை வளர்த்திடும் அரசா போற்றி**
   **கருமவினை வென்று மக்களை**
   **காத்தருளவே ஞானியாக வந்த தேசிகா**
2. தேசிகனே உன் பெருமை கூறி
   தெரிவிக்க **விகாரி தகர் திங்கள்**
   **ஆசிபட மூவேழீர் திகதி சோம வாரம்**
   **(விகாரி வருடம் சித்திரை மாதம் 23ம் நாள் 06.05.2019, திங்கட்கிழமை)**
   **அருளுவேன் நித்ய பிரசன்ன ஆசி**
3. ஆசியை பட்டினத்தார் யானுரைப்பேன்
   அகிலமதில் வள்ளல் நெறி
   பேசிட எங்கும் தழைத்தோங்க
   பிசகில்லா சமதர்மநிலை காணும்
4. காணவே சுத்தநெறி பரவ
   கண்ணியமான சமூகச் சூழலும்
   ஞானபூமியுமாக உலகம் மாறும்
   ஞானதேசிகன் அருளாசி பெற்று வர
5. வருகவே உலக மக்களுக்கு
   வல்லமையும் ஞானபலமும்
   முருகன் அருளும் தயவும் கிட்டும்
   முழுமைபட தருமவேலி எனும்
6. எனும் பாதுகாப்பு சேவைக்குள்
   எல்லா தேசமக்களும் வருக
   தானதரும வழி பொருளுதவி
   தரணியோர் வந்து செய்துமே
7. செய்துமே தன்னார்வ தொண்டில்
   செயலாக மக்கள் இணைந்து வர
   மெய்ஞானம் பரவி மக்களிடை
   முழுமையான அழியாமை பெருக நேரும்
8. பெருகவே பேரிடராக வாழ்வில் வரும்
   பிரச்சனை வஞ்சம் வக்ரம் கொடூரம்
   தருமபலத்தால் விலகி ஓடும்
   தயவை கூட்ட எதிர்மறை சிந்தை விலகும்
9. விலகியே மக்களிடை சமத்துவம்
   விரைந்து தெளிவும் திடமும்
   கலகம் உயிர் பலி என்பதில்லா
   கட்டுப்பாடும் ஓர்மை பலமும்

10. பலமான ஞானவாழ்வும் நெறியும்
பழுதில்லா கண்டு சிறப்பர்
வளமான அரங்கன் தந்த
வாய்ப்பை உலக மாற்றமாக எண்ணி

11. எண்ணியே உலகோர் பின்பற்றி
இணைந்து கலந்து வருக
அண்ணலின் ஆசிபட உலகோர் தேறுவர்
அறிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–